ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் தேசிகன் திருவடிகளே சரணம்

முதலாயிரம்

பெரியாழ்வார் திருமொழி

மூன்றாம்பத்து

_______________

2-ஆம் திருமொழி - அஞ்சனவண்ணனை

_______*________

* அஞ்சனவண்ணனை ஆயர்கோலக்கொழுந்தினை *
மஞ்சனமாட்டி மனைகள்தோறும்திரியாமே *
கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின் *
என்செயப்பிள்ளையைப்போக்கினேன்? எல்லேபாவமே! (1)

பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரொடுபாடியில் *
சிற்றில்சிதைத்துஎங்கும் தீமைசெய்துதிரியாமே *
கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்குஎன்பிள்ளையைப்போக்கினேன்? எல்லேபாவமே! (2)

நன்மணிமேகலை நங்கைமாரொடுநாள்தொறும் *
பொன்மணிமேனி புழுதியாடித்திரியாமே *
கன்மணிநின்றதிர் கானதரிடைக்கன்றின்பின் *
என்மணிவண்ணனைப்போக்கினேன் எல்லேபாவமே! (3)

வண்ணக்கருங்குழல் மாதர்வந்துஅலர்தூற்றிடப்
பண்ணிப்பலசெய்து இப்பாடியெங்கும்திரியாமே *
கண்ணுக்கினியானைக் காந்தரிடைக்கன்றின்பின் *
எண்ணற்கரியானைப்போக்கினேன் எல்லேபாவமே! (4)

அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர்பெண்டிர்க்குஅணுக்கனாய் *
கொவ்வைக்கனிவாய்கொடுத்துக் கூழைமைசெய்யாமே *
எவ்வும்சிலையுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
தெய்வத்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே! (5)

மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய்விழுங்கிப்போய் *
படிறுபலசெய்து இப்பாடியெங்கும்திரியாமே *
கடிறுபலதிரி கானதரிடைக்கன்றின்பின் *

இடறஎன்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே! (6)

வள்ளிதுடங்கிடை மாத்ர்வந்துஅலர்தூற்றிட *
துள்ளிவிளையாடித்தோழரோடுதிரியாமே *
கள்ளியுணங்கு வெங்கானதரிடைக்க்ன்றின்பின் *
புள்ளிந்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே! (7)

பன்னிருதிங்கள் வயிற்றிலகொண்டஅப்பாங்கினால் *
என்னிளங்கொங்கை அமுதமூட்டியெடுத்துயான் *
பொன்னடிநோவப் புலரியேகானில்கன்றின்பின் *
என்இளஞ்சிங்கத்தைப்போக்கினேன் எல்லேபாவமே! (8)

குடையும்செருப்பும்கொடாதே தாமோதரனைநான் *
உடையும்கடியன ஊன்றுவெம்பரற்களுடை *
கடியவெங்கானிடைக் காலடிநோவக்கன்றின்பின் *
கொடியேன்என்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே! (9)

* என்றும்எனக்குஇனியானை என்மணிவண்ணனை *
கன்றின்பின்போக்கினேனென்று அசோதைகழறிய *
பொந்திகழ்மாடப் புதுவையர்கோன்பட்டன்சொல் *
இந்தமிழ்மாலைகள்வல்லவர்க்கு இடரில்லையே. (10)

அடிவரவு : அஞ்சனம் பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடை என்றும் சீலை